

▶ நாமக்கல், மஹேந்திரா கல்லூரிகளின் சார்பில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினவிழாவை பர்வின் சுல்தானா குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அருகில் கல்லூரியின் நிர்வாகிகள் மற்றும் பேராசிரியர்கள் உள்ளனர்.

# பெண்களுக்கான விழிப்புணர்வு பயிலரங்குகளை நடத்த வேண்டும்

## மகளிர் தினவிழாவில் அழைப்பு

சேலம், மார்ச் 8: பெண்களுக்கான விழிப்புணர்வு பயிலரங்குகளை அதிகம் நடத்த வேண்டுமென மகளிர் தினவிழாவில் கல்வியாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

நாமக்கல், மஹேந்திரா கல்லூரிகளின் சார்பில் சர்வதேச மகளிர் தினவிழா கல்லூரி வளாகத்திலுள்ள மகாத்மா காந்தி கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரியின் நிறுவன தலைவர் பாரத்குமார் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக பர்வின் சுல்தானா கலந்து கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது:

பெண்கள் கற்றலோடு நில்லாமல், சமூக மறுமலர்ச்சி அடைய தன்னை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அறிவு மற்றும் உணர்வுசார் நன்னறிவுடன் உயர்நிலையை அடைய வேண்டும். பெண் சமுதாயம் ஒன்றுபட்டு சமூக சீரழிவுகளை களைய வேண்டும். மேலும், பெண்களுக்கான அதிக விழிப்புணர்வு பயிலரங்குகளை கல்வியாளர்கள் நடத்த முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் கல்லூரியின் செயல் இயக்குநர் சாம்சன் ரவீந்திரன், குழும முதல்வர்கள் மாதேஸ்வரன், தேவராஜன் கோபால், மோகன் சுந்தரராஜ், ராஜவேல், மைதிலி, உமா மகேஸ்வரி, பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கட்டுரை, பேச்சு மற்றும் திறனாய்வு போட்டிகளில் சிறந்த மாணவிகளுக்கு பரிசுகளுடன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

• தினகரன் • சேலம் 8.3.2014